வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 8.10.2025 நேரம்-மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மும்பையில், **முதல் கட்ட நவிமும்பை சர்வதேச விமான நிலையத்தை** திறந்து வைத்தார்.

இந்தியாவில் அனைத்து மக்களின் வாழ்வில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக **டிஜிட்டல் இணைப்பு** திகழ்வதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்

**செயற்கை நுண்ணறிவு** மூலம் ஒவ்வொருவரும் தங்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்று மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி கூறி உள்ளார்

புதுச்சேரியில் செயல்படும் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் **மோட்டார் வாகன தொழிலாளர் நலப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ்** பதிவு பெற வேண்டும் என தொழிலாளர் துறை அறிவித்துள்ளது

மோடி-மகராஷ்டிரா

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மும்பையில், 19 ஆயிரத்து 650 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள, முதல் கட்ட நவிமும்பை சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்து அதன் பல்வேறு பகுதிகளை சுற்றிப் பார்த்தார். இந்த விமான நிலையம் முன்னேறிய இந்தியாவின் பிரதிபலிப்பு என்று விழாவில் பேசுகையில் அவர் கூறினார். மகாராஷ்டிர விவசாயிகளை மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய சந்தையுடன் இணைக்கும் பாலமாக இந்த விமானநிலையம் திகழும் என்றும் இதனால் புதிய முதலீடுகள் மற்றும் வர்த்தக வாய்ப்புகளை ஈர்க்க முடியும் என்றும் அவர் கூறினார்.

மும்பையில், 12 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள, 3 ஆம் கட்ட மெட்ரோ ரயில் பாதையையும், விழாவின் போது பிரதமர் திறந்து வைத்தார். 11 விதமான போக்குவரத்து நிறுவனங்களின் சேவைகளை ஒருங்கிணைத்து வழங்கும் வகையிலான நாட்டின் முதலாவது மும்பை-ஒன் பொதுப் போக்குவரத்து செயலியை அவர் தொடக்கி வைத்தார். 400 அரசுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மற்றும் 150 தொழில்நுட்ப பள்ளிகளை சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு திறன்களை வழங்குவதற்கான மகராஷ்டிர அரசின் குறைந்த கால பயிற்சி திட்டத்தையும் பிரதமர் தொடக்கி வைத்தார்.நாளை மும்பையில்

இங்கிலாந்து பிரதமர் திரு கியர் ஸ்டார்மரை, பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து, இருதரப்பு கூட்டாண்மை உறவுகளின் முன்னேற்றத்தை மறு ஆய்வு செய்கிறார். அடுத்த 10 ஆண்டுகளுக்குள், வர்த்தகம், முதலீடுகள், பாதுகாப்பு, எரிசக்தி, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் காலக்கெடு அடிப்படையில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கிலான **விஷன்-2035** திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்படும். பிராந்திய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளில் இரு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொள்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, 2 நாள் இந்தியப் பயணமாக இன்று மும்பை வந்துள்ள இங்கிலாந்து பிரதமர் திரு கியர் ஸ்டார்மரை வரவேற்று, பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். இரு தலைவர்களும் இணைந்து நாளை மும்பையில், 6-ஆவது உலக **ஃபின்-டெக் திருவிழாவில்** பங்கேற்க உள்ளனர்.

*மோடி-மொபைல் காங்கிரஸ்*

தற்போது இந்தியாவில் அனைத்து மக்களின் வாழ்வில் ஒருங்கிணைந்த பகுதியாக **டிஜிட்டல் இணைப்பு** திகழ்வதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று புதுடெல்லி யஷோபூமியில், தொலை தொடர்பு, ஊடகம் மற்றும் தொழில் நுட்பம் பற்றிய, ஆசியாவின்

மிகப் பெரிய இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டை அவர் தொடக்கி வைத்துப் பேசினார். பிரதமரின் உரையில் இடம் பெற்ற முக்கிய கருத்துக்கள்..................

**(வாய்ஸ்)**

*மோடி-மொபைல் காங்கிரஸ்*

**(வாய்ஸ்)**

ஒரு காலத்தில் 2-ஜி தொழில் நுட்பத்துடன் போராடிக் கொண்டிருந்த இந்தியாவில் தற்போது எல்லா மாவட்டங்களுக்கும், 5-ஜி தொலை தொடர்பு இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார். முற்றிலும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட 4-ஜி வன்பொருள் மற்றும் மென்பொருள் தொகுப்புகள் அண்மையில் பயன்பாட்டிற்கு வந்திருப்பதாகவும், உலகிலேயே இத்தகைய வல்லமை படைத்த 5 நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார். தொலைதொடர்பு துறையில் இந்தியாவிற்கு கிடைத்துள்ள வெற்றி, சுயசார்பு இந்தியா என்னும் உணர்வினால் ஏற்பட்ட ஆற்றலின் பிரதிபலிப்பு என்று பிரதமர் கூறினார். இந்திய டிஜிட்டல் பொது கட்டமைப்பின் வெற்றியை வைத்துப் பார்த்தாலே, இந்தியாவில் முதலீடு செய்வதற்கு ஏற்ற தருணம் இதுதான் என்பதை புரிந்து கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மோடி-மொபைல் காங்கிரஸ்

இண்டியா மொபைல் காங்கிரஸ் மாநாட்டின் தொடக்க விழாவில், மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா பேசுகையில், உலகில் மொத்தம் உள்ள மொபைல் போன்களில் 20 சதவிகிதம் தற்போது இந்தியாவில் இருப்பதாகவும் இந்தியாவின் பிராட்பேண்ட் சந்தாதாரர் எண்ணிக்கை, 94 கோடியை விட அதிகம் என்றும் கூறினார்.

மத்திய அரசின் தொலைதொடர்பு துறையும், செல்போன் சேவை வழங்கும் நிறுவனங்களின் கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த 4 நாள் மாநாட்டில் 6-ஜி மற்றும் செமி கண்டக்டர் தொழில்நுட்பத்திலும், கண்ணாடி இழை மற்றும் குவாண்டம் தகவல் தொடர்பிலும், இந்தியா முக்கிய கவனம் செலுத்தி வருவதை எடுத்துக் காட்டும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் மற்றும் அமர்வுகள் இடம் பெறுகின்றன.

மோடி-கட்டுரை

கடந்த 10 ஆண்டுகளில், வனவிலங்கு பாதுகாப்பில் இந்தியா எட்டியுள்ள கணிசமான முன்னேற்றம் குறித்து மத்திய சுற்றுச்சூழல் மற்றும்வனத்துறை அமைச்சர் திரு பூபேந்திர யாதவ் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை பிரதமர் திரு நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து

கொண்டுள்ளார். பல்வேறு விலங்கினங்களைப் பாதுகாத்து, அவற்றின் வாழ்விடங்களை மறுசீரமைக்க இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளையும் சுற்றுச்சூழலின் நீடித்த தன்மையை உறுதிப்படுத்துவதில் நாட்டிற்கு உள்ள உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்தும் வகையில் அமைச்சரின் கட்டுரை அமைந்து இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார். புலிகளைப் பாதுகாப்பதற்கான அமிர்தகால தொலைநோக்கு, சிறுத்தைகள் பாதுகாப்பு, டால்பின் பாதுகாப்பு போன்ற அரசின் பல்வேறு முன் முயற்சிகள் குறித்தும் அமைச்சரின் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

*செயற்கை நுண்ணறிவு*

செயற்கை நுண்ணறிவு என்பது பொறியாளர்களுக்கு மட்டுமே உரிய தொழில் நுட்பம் அல்ல என்றும், ஒவ்வொருவரும் தங்களின் உற்பத்தித் திறன் மற்றும் வாழ்வாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள செயற்கை நுண்ணறிவை பயன்படுத்த முடியும் என்றும் மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி கூறி உள்ளார். **அனைவருக்குமான சமூக மேம்பாட்டில் செயற்கை நுண்ணறிவின்** பங்கு என்பது குறித்து, **அதிநவீன தொழில்நுட்பங்கள் பற்றிய நிதி ஆயோக் மையத்தினால்** தயாரிக்கப்பட்டுள்ள இன்று புதுடெல்லியில் அவர் வெளியிட்டார். செயற்கை நுண்ணறிவுத் தொழில்

நுட்பத்தின் பயன்பாட்டிற்கு மாணவர்களை தயார் படுத்தும் பாடங்கள், 6-ஆம் வகுப்பில் இருந்தே பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் ஆன்-லைன் மூலம், இலவச **கற்றல் ஆதாரங்கள்** வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அடித்தட்டு மக்கள் வரை சென்றடைந்து அவர்களுக்கான வாய்ப்புகளையும் அதிகரிப்பதில் தான், செயற்கை நுண்ணறிவின் வெற்றி அடங்கி இருப்பதாக அவர் குறிப்பிட்டார். நிதி ஆயோக் தலைமை செயல் அதிகாரி திரு பி வி ஆர் சுப்பிரமணியம் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*ஜிஎஸ்டி-யுபி*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிடிஸ்டி சீர்திருத்தங்களால் உத்தரபிரதேஷ் மாநிலத்தில் பொருளாதாரம் எப்படி எல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு **செய்தித் தொகுப்பு**........

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி-யுபி*

**(வாய்ஸ்)**

புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் உத்தரபிரதேசத்தில் கைவினைக் கலைஞர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் மற்றும் உள்ளூர் அளவிலான

தொழில்களுக்கு, முக்கிய பலன்கள் ஏற்பட்டுள்ளன. உத்தரபிரதேசத்தில் தயாராகும் பதோஹி தரை விரிப்புகள், மொரதாபாத் வெண்கலப் பொருட்கள், சஹாரன்பூர் மர வேலைப்பாடுகள் போன்ற பாரம்பரியப் பொருட்கள் மீதான 12 சதவிகித ஜிஎஸ்டி 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதால், இப்பொருட்களின் விலை குறைந்து ஏற்றுமதி அதிகரிக்கவும், ஆயிர கணக்கிலான கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரம் மேம்படவும் ஏதுவாகி உள்ளது. தங்கம் மற்றும் வெள்ளி ஜரிகை வேலைபாடுகளுடன் கூடிய, பனாரசி ஜர்தோசி பொருட்களின் விலையும் குறைகிறது. இரண்டாயிரத்து 500 ரூபாய் விலையுள்ள காலணிகள் மீதான ஜிஎஸ்டி குறைக்கப்பட்டுள்ளதால், கான்பூர் மற்றும் ஆக்ரா பகுதியில் செயல்படும் தோல் பொருள் உற்பத்தி நிறுவனங்களும், இத்துறை சார்ந்த பல லட்சம் தொழிலாளர்களும் பயன் பெறுகிறார்கள். கண்ணாடி, பீங்கான் மற்றும் சுடுமண் பொருட்களுக்கு பெயர் பெற்ற ஃபிரோசாபாத், கோரக்பூர் உள்ளிட்ட பகுதிகளிலும் வரிக் குறைப்பினால் புது உற்சாகம் ஏற்பட்டுள்ளது. மீரட், சித்திரக்கூட் உள்ளிட்ட பகுதிகளில் கைவினைக் காகிதம் மற்றும் பாரம்பரிய பொம்மை உற்பத்தியாளர்களும் ஊக்கம் பெற்றுள்ளனர். மக்களிடையே மிகவும் பிரபலமான ஆக்ரா பேடா இனிப்புகள் மீதான ஜிஎஸ்டியும் 5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது. இதுஅல்லாது சிமெண்ட் மீதான 28 சதவிகித ஜிஎஸ்டி 18 சதவிகிதமாக

குறைக்கப்பட்டுள்ளதால் நாட்டின் இதர பகுதிகளைப் போலவே உத்தரபிரதேசத்திலும் கட்டுமானச் செலவு குறைந்து பொருளாதாரம் வலுப் பெறும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

*புதுவை மோட்டார் வாகனம்*

புதுச்சேரியில் செயல்படும் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மற்றும் கூரியர் சேவை நிறுவனங்கள், மோட்டார் வாகன தொழிலாளர் நலப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என தொழிலாளர் துறை அறிவித்துள்ளது. ஏற்கனவே பதிவு பெற்றவர்கள் குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னர் பதிவை புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம், உடனடியாக இதற்கு விண்ணப்பித்து சட்ட ரீதியிலான நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் தொழிலாளர் துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஏனாம்-பேரணி*

பிஜேபி கூட்டணி ஓட்டுத் திருட்டில் ஈடுபடுவதாக கூறியும் அதைக் கண்டித்தும் ஏனாமில் காங்கிரஸ் சார்பில் இன்று நடைபெற்ற மெழுகுவர்த்தி ஊர்வலத்தில் புதுச்சேரி பிரதேச காங்கிரஸ் தலைவர் தலைவர் திரு வைத்திலிங்கம், மற்றும், காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து

கொண்டனர். பின்னர் காஜுல தோட்டம் பகுதியில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றதாக எமது ஏனாம் நிருபர் தெரிவிக்கிறார்.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் காரணமாக இன்றைய தினம் தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கோவை. நீலகிரி, சேலம், ஈரோடு, தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிபேட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 14-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர், சென்னை மேடவாக்க மண்டலம் உள்ளிட்ட இடங்களில், தலா 3 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

உலக கோப்பைக்கான ஐசிசி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டித் தொடரில் ஆஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே இன்று கொழும்பில் நடைபெறும் போட்டியில், டாஸ் ஜெயித்த பாகிஸ்தான் அணியால் முதலில் ஆட பணிக்கப்பட்ட ஆஸ்திரேலிய அணி, சற்று முன்

வரை, -------- ஓவர்களில், ------------ விக்கெட் இழப்பிற்கு, --------- ரன் எடுத்து இருந்தது.

*நல்லாட்சி*

நல்லாட்சி மாதத்தின் ஒரு பகுதியாக, நல்லாட்சி மற்றும் ஆவணப் பதிவு என்ற தலைப்பில் புதுடெல்லியில், தேசிய ஆவணக் காப்பகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கண்காட்சி ஒன்றை மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் வரும் வெள்ளிக்கிழமை தொடக்கி வைக்கிறார். மக்களுக்கு நல்லாட்சி வழங்குவதில் ஆவணப் பதிவின் பங்கையும் அரசு நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வின் முக்கியத் துவத்தையும் வெளிப்படுத்தும் வகையில், பல்வேறு அமைச்சகங்களின் ஆவணப் பதிவேடுகள் இக்கண்காட்சியின் போது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மும்பையில், முதல் கட்ட நவிமும்பை சர்வதேச விமான நிலையத்தை திறந்து வைத்தார்.

இந்தியாவில் அனைத்து மக்களின் வாழ்வில் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக டிஜிட்டல் இணைப்பு திகழ்வதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்

செயற்கை நுண்ணறிவு மூலம் ஒவ்வொருவரும் தங்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்று மத்திய திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி கூறி உள்ளார்

புதுச்சேரியில் செயல்படும் தனியார் போக்குவரத்து நிறுவனங்கள் மோட்டார் வாகன தொழிலாளர் நலப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பதிவு பெற வேண்டும் என தொழிலாளர் துறை அறிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------